# நமக்கு
# இன்றைய
# தேவை
# என்னவெனில்
# மனிதர்களே

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

59. நீங்கள், “நீர் எப்போதுமே நம்முடைய ஸ்திரீகளையும், நம்முடைய ஸ்திரீகளைக் குறித்துமே பேசிக்கொண்டிருக்கிறீர்” என்று கூறலாம். சரி, மனிதர்களே, அப்படியானால் ஒருவிசை உங்களை நான் நன்றாக அலசிப்பார்க்கிறேன். நான் உங்களிடம் ஒன்றைக் கூறட்டும். தன்னுடைய மனைவியை சிகரெட்டுகளைப் புகைக்கவும், குட்டை உடைகளை அணியவும் அனுமதிக்கும் எந்த மனிதனும் அவன் ஒரு மனிதனாய் இருந்தும் கூட அவன் மேல் கொஞ்சம் மரியாதையே எனக்கு உள்ளது. அவன் மிகவும் பெண் தன்மை கொண்டவனாயிருக்கிறான், அவன் எதைச் சேர்ந்தவன் என்பதும் கூட அவனுக்குத் தெரியவில்லை. அவன் ஒரு மனிதனே அல்ல. அது சரியே. ஓ, அல்லேலூயா. அது சரியே. அவன் ஒரு மனிதனுக்கு இழிவான சாக்குப்போக்காக இருக்கிறான். ஓ, அவன் ஒருவேளை ஆறடி உயரமுள்ளவானாகவும், 200 பவுண்டுகள் எடையுள்ளவனாகவும் இருக்கலாம், ஆனால் அது எனக்கு ஒரு மனிதனைப் போன்று காணப்படவில்லை. **உங்களுடைய வீட்டின் எல்லா இடங்களிலும் யார் முதலாளி** (boss) **என்பதை அது காண்பிக்கிறது. அவள்**

**கோபத்தோடு தன்னுடைய காலை தரையில் மிதித்து நடந்து வந்து, "நான் இப்பொழுதே உன்னிடம் கூறுகிறேன்" என்று [கூறும்போது], நீங்கள் ஒரு வியாதிப்பட்ட பூனைக்குட்டியைப் போன்று தலைவணங்கி விடுகிறீர்கள்.** என்ன காரியம்? நமக்குத் தேவையானது... **நமக்கு இன்றைய தேவை என்னவெனில் மனிதர்களே. நமக்கு சுவிசேஷ பிரசங்கிமார்கள் தான் அவசியமாயுள்ளது.** பிரசங்க பீடத்தில் நின்றுகொண்டு, அந்தக் காரியங்களைக் குறித்து பேசாமல் தவிர்த்து விடும் எந்தப் பிரசங்கியாரும் தான் தேவனால் அழைக்கப்பட்டிருந்தாலும் அவரிடம் சிறிதளவு மரியாதையே எனக்குள்ளது. சரி. பிரசங்க பீடத்தில் நின்று தேவனுடைய சத்தியத்தை கூற வெட்கப்படுகிற ஒரு மனிதன், ஒரு ஸ்திரீ தன்னுடைய மயிரைக் கத்தரிப்பது ஒரு ஒழுக்கக்கேடான காரியம் என்பதை அறியும் போது... வேதாகமம்... ஒரு மனிதனுடைய மனைவி

தன்னுடைய மயிரைக் கத்தரிக்கும்போது, அவளை விட்டு விலகி, அவளை விவாகரத்து செய்ய அவனுக்கு உரிமை உண்டு. வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. ஸ்திரீயினுடைய தலை யார்? அவளுடைய கணவன். வேதாகமம், "ஒரு ஸ்திரீ தன் மயிரைக் கத்தரித்துக் கொண்டால், அவள் தன்னுடைய தலையைக் கனவீனப்படுத்துகிறாள்" என்று கூறுகிறது.

கனவீனமான எந்த ஸ்திரீயுடனும் வாழக்கூடாது. ஆமென். அவள் தன்னுடைய மகிமையை கத்தரித்துப் போடுகிறாள். சபையும் அதைத்தான் செய்கிறது. அவள் அதே காரியத்தைச் செய்கிற போது, அவளுடைய மகிமையின் நதியை அவள் துண்டித்துப் போடுகிறாள்.

உம். ஓ, தேவனே, நான் இந்தக் காரியங்களை ஏன் கூறுகிறேன்? ஆனால் இது சத்தியமாயுள்ளது. இல்லை, **நமக்கு சமரசம் செய்கிறவர்கள் அவசியமில்லை.** - நமக்குத் தேவையில்லை. **நீதிக்காகவும் உரிமைக்காகவும் நின்று அது என்னவாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சத்தியத்தைக் கூறுகிற மனிதர்களும் ஸ்திரீகளுமே நமக்குத்**

**தேவை.** ஆமென். தேவனுடைய முத்திரை... என்னுடைய சகோதரனே, உன்னுடைய விளக்கின் திரியை வெட்டி சுத்தப்படுத்து. பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சமானது மீண்டும் புத்துணர்ச்சியோடு எரியட்டும். இது இருளடைந்து கொண்டிருக்கிறது. **ஓ, இது அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நேரமாயுள்ளது.** இது இருளடைந்து கொண்டிருக்கிறது.

*செய்தி:* **61-02-16 மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும்** #1

★★★★★